# LAABH SAMACHAR

Volume: 08 | Issue : 08 | November 2019 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



Individual Villas at Madurai for
24 Lakhs*

* DTCP Approved 140 Villas Layout
* Located at Airport -Thirumangalam Ring Road
* 24 Hours Security
* Suitable for Retirement Homes
* Solar Powered Villas
* Drinking Water Connection
* 40' and 30' Roads
* 3 Times Food Served at Home^
* Temple at Site

Call 90808 38798

Registration and Service Connection Charges Extra

Energy Livingscapes
Value . Fortune . Pride

HEAD OFFICE :
Plot No 264, LIG Colony,
Off Lake View Road , KK Nagar ,
Madurai - 625 020
Contact : 81108 11180
Email: info@energyls.in




## How to Balance Health Vs Business

by **Dr. B.R.J. Kannan**, M.B.B.S., Cardio, Sr. Consultant & Interventional Cardiologist



To



வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

SOWBHAGYAAS

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536




அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016
LC LASER CARE
Printer Service
Toner Refill
TONER REFILL
1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com
Canon


AQUA DIAMOND RO
Sales & Service
All Company RO Water Purifier Service and exchange available
Thirukonda M. Vishnukumar
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

நமது சேம்பரில் ஒவ்வொரு மாதமும் தொழில் சார்ந்த கூட்டம் சிறப்பான முறையில் நடந்து வருகிறது. இது வரை நடைபெற்ற கூட்டங்கள் அனைத்தும் அரங்கம் நிறைந்து காணப்பட்டதுடன், கலந்து கொண்ட அனைவருக்கும் பயனுள்ள கூட்டங்களாக அமைந்தது சிறப்பு. புதிய முகங்கள் ஆர்வத்தடன் கலந்து கொள்வதை காண முடிந்தது. அங்கத்தினர்கள் அனைவரும் இதே போன்று தொடர்ந்து கலந்து கொண்டு ஆதரவளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தர அமைப்பு MSME-ன் வரையறையை மாற்றியமைக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. அது, முதலீட்டின் அடிப்படையில் இல்லாமல், அந்நிறுவனத்தின் Turnover அடிப்படையில் கொண்டு வர இந்த வரையறையைக் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய தொழில் துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்கள் தெரிவித்துள்ளார். தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக இந்த வரையறையை கொண்டு வர இருப்பதாக தெரிவித்துள்ளார். இருப்பினும், தொழில் அமைப்பினர், தொழில்முனைவோர்கள் இந்த புதிய வரையறையால் குறு, சிறு நிறுவனங்கள் பாதிப்படையும் என்ற கருத்தையும் தெரிவித்து வருகின்றனர். அரசின் எந்த ஒரு முடிவும், தொழில்துறையினர்களை பாதிக்காத வகையில் இருக்கவே விரும்புகிறோம்.

நமது பாரத நாட்டின் இரண்டு முக்கியமான பிரச்சனைகளாக இருந்து வந்த காஷ்மீர் மற்றும் ஆயோத்தியா பிரச்சனைகளை, எந்த ஒரு பக்க விளைவுகள் ஏற்பாடதவாறு கையாண்டு, அமைதியான முறையில், அனைத்து தரப்பினரும் ஒருமித்த மனத்துடன் ஏற்கும் வகையில் தீர்வு கொண்டு வந்துள்ள மோடி அரசிற்கு சிரம் தாழ்ந்தி வரவேற்கிறோம்.

நன்றி — குமரன் B ஜகுவா

## திருக்குறள்

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தால்
ஆக்கம் பலவுந் தரும்.

சௌராஷ்ட்ர மொழியில்: வைரிமௌ ப²ல்வானுக் மிள்ள து³ருக³மிளி தே³யி ப²லனு ஜீ⁴குன்

**பொருள்:** பலவிதமான திறமைகள் உள்ளவர்களுக்கும் பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்திருப்பதால் கிடைக்கக் கூடிய வல்லமை பல நன்மைகளைத் தரும்.

அதிகாரம் 50 — இடன் அறிதல் (காரியம் செய்வதற்கு இடத்தை அறிதல்) — அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

01.11.2019 - நமது சமூகத்தின் பெருமைக்குரிய பிரமுகர் ஆந்திர மாநில அரசு உள்துறை முதன்மை செயலாளர் ஸ்ரீ. K.R.M. **கிஷோர் குமார்** I.P.S. அவர்களின் புதல்வர் திருமண விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர்.

05.11.2019 - ஆந்திர மாநில அரசு உள்துறை முதன்மை செயலாளர் ஸ்ரீ. K.R.M. **கிஷோர் குமார்** I.P.S. அவர்கள் புதல்வரின் திருமண வரவேற்பு விழா ஆந்திர மாநிலம் குண்டூரில் நடைபெற்றது. ஆந்திர முதல்வர் Y.S. **ஜெகன் மோகன் ரெட்டி** அவர்கள் கலந்து கொண்டார். நமது சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. K.V. **பாலா** அவர்களும், PRO திரு. P.M. **முரளி** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

05.11.2019 - மாலை 6 மணி அளவில் **How to balance Health Vs Business** என்ற தலைப்பில் மாதாந்திரக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. சிறப்பு விருந்தினராக Dr. B.R.J. **கண்ணன்** M.B.B.S., Cardio, Sr. Consultant & Interventional Cardiologist, Vadamalayan Hospital, Mdu. அவர்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இதில் சேம்பர் அங்கத்தினர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலியில் உள்ள நமது சேம்பர் உறுப்பினரான **Sanghvi Wire Tech** நிறுவனத்தினர் கடந்த ஜுன் மாதம் தங்களது Safety Pin தயாரிப்பிற்கு விதிக்கப்பட்டுள்ள ஜி.எஸ்.டி., 18% லிருந்து 5% ஆக குறைக்க வேண்டி மத்திய மாநில அரசிடம் கோரிக்கை வைக்க சேம்பரிடம் மனு அளித்திருந்தனர். அதனை ஏற்று, நமது சேம்பர் GST கவுன்சில், தமிழக மற்றும் மத்திய நிதி அமைச்சருக்கு கடிதமும் அனுப்பியது. அதன் பயனாக கடந்த செப்டம்பர் மாத GST Council கூட்டத்தில் Safety Pin-க்கு ஜி.எஸ்.டி., 18% லிருந்து 12% ஆக குறைக்கப்பட்டுள்ளதை அறிந்து தொலைபேசியின் மூலம் அந்நிறுவனத்தார் சேம்பர்-ன் செயல்பாட்டிற்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

– K.K. **தினேஷ்**

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

லாப் ஸமாச்சார் இதழ் சிறப்பான முறையில் வெளி வந்து கொண்டிருக்கிறது. இதழ் குறித்த தங்களது கருத்துக்களை அங்கத்தினர்கள் தொலைபேசி மூலமாகவோ, கடிதமாகவோ தெரிவித்தால் இதழ் மேலும் சிறப்பாக வெளிக்கொணர உதவியாக இருக்கும். தங்கள் கருத்தை அடுத்த மாத இதழிலும் தங்கள் பெயர் விபரத்துடன் வெளியிடப்படும். தங்களின் கருத்துக்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பல ஆண்டுகளாக நீடித்து வந்த அயோத்தி வழக்கில் உச்ச நீதிமன்றம் கடந்த 9.11.2019 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பிறகு, மக்கள் அனைவரும் அமைதி காத்தனர். நாட்டின் எந்தப் பகுதியிலும், அசம்பாவிதங்கள் நடந்ததாக தகவல் இல்லை. இந்த தீர்ப்பு அனைவரும் ஒருமனதுடன் ஏற்றுக்கொண்டதாகவே தெரிகிறது. இதன் பிறகு நாட்டில், இதே போன்ற அமைதி தொடர வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி., காஷ்மீர் பிரச்சனை, தற்போது அயோத்தி பிரச்சனை என பல சவாலான விஷயங்களை மிகச் சாதாரணமாக எதிர்கொண்டு செயலாற்றி வரும் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் ஆற்றல் அளப்பரியது. அவரின் இந்த ஆற்றலால் நாடும் வளர்ச்சி பெருகிறது. ஒவ்வொரு தனி மனிதர்களுக்கும் நாம் பாரதப் பிரஜை என்று பெருமையுடன் கூறிக்கொள்ளவும் முடிகிறது. வாழ்க பாரதம் : வாழ்க தமிழ்நாடு.

நன்றி



B.S. **ஜனார்த்தனன்**


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifications, Amendments, New Technology etc..
**93441 97952**



LAABH SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952



# சாதனை வணிகர்

## மீராகுஞ்ச் பைப்ஸ்

*நேர்காணல்: J.S. சாயி ஜீவன்*



கொண்டா. K.S. **தாமோதரன்**

'ஒருவர் தொழில் துவங்க சொந்த முதலீடு தேவையில்லை, திறமையும் கடின உழைப்பு மற்றும் தன்னம்பிக்கை இருந்தால் போதும் வெற்றிகரமாக தொழிலதிபராக வர முடியும்.' என்பதற்கு சிறந்த உதாரணமாக விளங்கியவர் காலஞ்சென்ற திரு. கொண்டா. K.S. **தாமோதரன்** ஆவார்.

அவரால் தொடங்கப்பெற்ற இந்நிறுவனம். இன்று அவரின் வாரிசுகளால் நூறு பணியாளர்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலை வழங்கி வீறுநடை போட்டு பயணிக்கிறது.



1969-ல் மீராகுஞ்ச் பிளாஸ்டிக்ஸ் என்ற நிறுவனத்தை தொடங்கினார். PVC பைப் மற்றும் பிட்டிங்க்ஸ்களை சென்னையிலிருந்து கொள்முதல் செய்து மதுரையில் விற்று வந்தார்.

1971-ல் டிரேடிங் செய்தால் லாபம் குறைவாக கிடைக்கிறது என்பதற்காக தாமே PVC பிட்டிங்ஸ் உற்பத்தியில் ஈடுபட்டார். 1985-ல் திருப்புமுனையாக PVC Electrical பைப்களை பெரிய அளவில் உற்பத்தியை தொடங்கினார். 1992-ல் வாட்டர் பைப், 2000-ல் வாட்டர் டேங்க்-களை தயாரிக்கலானார். 1996-ல் தன் வாடிக்கையாளர்களின் வசதிக்காக மேலமாசி வீதி, காக்காத் தோப்புத் தெருவில் விற்பனையகத்தை தொடங்கி பிளாஸ்டிக் வணிகத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்தார்.



இவர்களின் தயாரிப்பு நிறுவனங்கள் தற்சமயம் சிலைமான், மணலூர் மற்றும் பசியாபுரம் ஆகிய மூன்று இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தொழில் தர்மத்தை மதித்து வணிகம் செய்தார். அந்தந்த ஊர்களின் விநியோகஸ்தர்கள் மூலமாகவே பொருட்களை விற்பனை செய்து வந்தார்.

மேலும், அமரர் K.S. தாமோதரன் அவர்கள் நம் சௌராஷ்ட்ர சேம்பர் தொடங்கப்பட்ட காலங்களில் மிகவும் உறுதுணையாக இருந்து செயலாற்றியவர். நம் சமூக முன்னேற்றத்தில் மிகவும் அக்கறை காட்டியவர்.

நம் சமூக ஆர்வலர்களுடன் நாயகி கல்வி சேவா சங்கத்தில் இணைந்து இயலாதவர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றினார். நாயகி ஹோம் டிரஸ்ட் என்கிற அமைப்பை உருவாக்கி முதியோர்களுக்கு உதவினார். அன்னாரின் தொலைநோக்குப் பார்வையும் கடின உழைப்பும் நினைவு கூறத்தக்கவை தொழில் மற்றும் சமூக சேவையில் தன் தகப்பனாரின் வழியில் பணியாற்றும் அவரின் வாரிசுகளான K.D. **தினகரன்பாபு, பிரபாகரன்பாபு, கிஷோரிலால்** மற்றும் **துவாரகநாத் பாபு** ஆகியோர் மேலும் மேலும் வளர்ச்சியடைய நம் சௌராஷ்ட்ர சேம்பர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
24X7 TV CHANNEL IN MADURAI
SOURASHTRA CABLE TV
Sourashtra Cable TV SCT Get it on Google Play Store
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34909
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD
179 177 41 64 77

## பங்குகளில் முதலீடு செய்யும் முன் தெரிந்துகொள்ள வேண்டியவை

சராசரி முதலீட்டாளர்களைப் பொருத்தவரை பங்கு முதலீட்டின் பலனை பெற, மியூச்சுவல் பண்ட் முதலீடே சிறந்தவழி. எனினும், பங்குச்சந்தையில் ஆர்வம் உள்ள பலர், நேரடியாக பங்குகளை வாங்க விரும்பலாம். நேரடி பங்கு முதலீடு என்பது, எல்லோருக்குமானது அல்ல என்பதோடு, ஆழமான ஆய்வு தேவைப்படுவது. நேரடி பங்கு முதலீட்டில் ஈடுபடுவதற்கு முன், அறிந்திருக்க வேண்டிய அம்சங்கள்.

**பங்குகள் தேர்வு:** பங்கு முதலீட்டில் சரியான பங்குகளை தேர்வு செய்வது முக்கியம். ஒருவர் தனக்கு தெரிந்தவற்றில் முதலீடு செய்ய வேண்டும் என, வலியுறுத்தப்படுகிறது. எனவே, ஆர்வம் உள்ள துறைகளை தொடர்ந்து கவனித்து, அதனடிப்படையில் நல்ல பங்குகளை தேர்வு செய்ய வேண்டும். அதே நேரத்தில் பரவலாக்கம் முக்கியம்.

**பங்கு வெளியீடு:** புதிய முதலீட்டாளர்கள், ஐ.பி.ஓ., என குறிப்பிடப்படும், பொது பங்கு வெளியீடு மூலம் பங்குகளை வாங்கலாம். பங்கு வெளியீடு தொடர்பான தகவல்கள் அடிப்படையில், நிறுவன பங்கு ஏற்றதா என, தீர்மானிக்கலாம். ஆனால், இந்தியாவில் எதிர்பார்த்த பலன் தந்த பங்கு வெளியீடுகள் குறைவு என, கருதப்படுகிறது.

**ஏற்ற, இறக்கம்:** பங்குச்சந்தை ஏறுமுகத்தில் இருக்கும் போது, எல்லாம் உற்சாகம் அளிக்கும். ஆனால், சந்தை சரியும் போது, வலியும், வேதனையும் உண்டாகலாம். எனவே, சந்தையின் ஏற்ற, இறக்க போக்கை புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு காரணமான பொருளாதார அம்சங்களையும் மனதில் கொண்டு, பங்குகளை தேர்வு செய்ய வேண்டும்.

**ஆய்வு தேவை:** பங்குகளை தேர்வு செய்ய ஆய்வும், அலசலும் முக்கியம். குறிப்பிட்ட நிறுவனத்தின் அடிப்படை அம்சங்களை அலசி ஆராய வேண்டும். சந்தை சார்ந்த மற்ற தகவல்களையும் கவனிக்க வேண்டும். பங்குகளை அலசுவதற்கு பின்பற்றப்படும், டெக்னிகல் அனாலசிஸ் போன்ற வழிகளையும் அறிந்திருக்க வேண்டும்.

**எப்படி வாங்குவது?:** பங்குகளில் பரிவர்த்தனை செய்வதற்கான வழிகளையும் அறிந்திருக்க வேண்டும். இதற்கு என, இணையதளங்கள் மற்றும் செயலிகள் இருக்கின்றன என்றாலும், புரோக்கர் கட்டணம், பரிவர்த்தனை கட்டணம் போன்றவற்றை அறிந்திருக்க வேண்டும். பங்கு பரிந்துரைகளை கையாளத் தெரிந்திருப்பதும் அவசியம்.

*- தினமலர்*

## பழைய பாலிசிகளை புதுப்பித்துக்கொள்ளும் வசதி

भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

பிரீமியம் தொகை செலுத்தாமல், காலாவதியாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேலான பாலிசிகளையும் புதுப்பித்துக்கொள்ளும் வாய்ப்பை எல்.ஐ.சி., நிறுவனம் வழங்குகிறது.

உரிய நேரத்தில் பிரீமியம் தொகை செலுத்தப்படவில்லை எனில், பாலிசி காலாவதியாகிவிடும். இவ்வாறு காலாவதியான பாலிசிகளை, அபராதத்துடன் பிரீமியம் தொகை செலுத்தி, புதுப்பித்துக்கொள்ளலாம். எனினும், கடைசியாக பிரீமியம் தொகை செலுத்திய இரண்டு ஆண்டுகளுக்குள் பாலிசியை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டால், புதுப்பித்துக்கொள்வது சாத்தியம் இல்லை.

2014ம் ஆண்டுக்குப் பின் எடுக்கப்பட்ட பாலிசிகளுக்கு இது பொருந்தும். இந்நிலையில், காலாவதியாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேலான பாலிசிகளையும் புதுப்பித்துக்கொள்ளலாம் என, ஆயுள் காப்பீட்டுக் கழகமான எல்.ஐ.சி., அண்மையில் அறிவித்துள்ளது.

காலாவதியாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆன, இதற்கு முன் புதுப்பித்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படாத பாலிசிகளையும் புதுப்பித்துக்கொள்ளலாம் என்று எல்.ஐ.சி., தெரிவித்துள்ளது.

இதையடுத்து, 2014க்கு பின் எடுக்கப்பட்ட பாலிசிகளை, பிரீமியம் செலுத்த தவறியதில் இருந்து, ஐந்து ஆண்டுகளுக்குள் புதுப்பித்துக் கொள்ளலாம். யூலிப் வகை பாலிசிகள் என்றால், மூன்று ஆண்டுகளுக்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

*- தினமலர்*






# NOTIFICATIONS

09.10.2019 தேதியிட்ட ஜி.எஸ்.டி., அறிவிப்புகள் வெளிவந்துள்ளது. (Notification No: 44, 45 46, 47, 48, 49 / 2019) அதன் முக்கியமான சாராம்சங்கள் பின்வருமாறு.

- புதிய ரிட்டன் படிவங்கள் ஏப்ரல் 2020 முதல் மட்டுமே அமலாக்கம் செய்யப்பட இருப்பதால் அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரையிலான காலத்துக்கான GSTR - 1 & GSTR - 3B ஆகிய Returnகளுக்கான Due dateகள் முறையாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே வழக்கத்தில் உள்ளது போல GSTR - 3Bக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி GSTR - 1 Monthly Returnக்கு அடுத்த மாதம் 11ம் தேதி GSTR - 1 Quartarly Returnக்கு Quarterly முடிந்த அடுத்த மாதத்தின் கடைசி நாள்.
- GSTR 3B ஒரு Return அல்ல என்று கோர்ட் தீர்ப்பு வந்த நிலையில் தற்போது Rules-ல் ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது மாற்றம் செய்யப்பட்ட Rules –ன் படி இனி GSTR - 3B சட்டப்படி ஒரு Return ஆகம். மேலும் GSTR - 3B தாக்கல் செய்தவர்கள் GSTR - 3 தாக்கல் செய்ய தேவையில்லை என தெளிவாக கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல மேற்கண்ட மாற்றங்கள் 1.7.2017 முதல் செயலாக்கம் பெறும் எனவும் கூறப்பட்டுள்ளது.
- அதே போல் ITC Rules-யிலும் ஒரு மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி பயன்படுத்திய ITC-க்கும் Portal-ல் Upload அப்லோட் செய்யப்பட்ட ITC-க்கும் இடையே 20% வித்தியாசம் இருக்கலாம் என கூறப்பட்டுள்ளது. இது பெரும்பாலானோருக்கு பயனளிக்கும் என்று நிச்சயமாக கூற முடியும்.
- VAT Practitioner அல்லாத அடிப்படையில் அதாவது Graduates, CA, CS, CMA, Advocate, Retired Officers ஆகிய முறையில் GST Practitioners ஆக enroll ஆனவர்களுக்கு Pass செய்ய விதிக்கப்பட்ட இரண்டாண்டு காலக்கெடு என்ற நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது. எனவே VAT Practitioner என்ற அடிப்படையில் enrol ஆனவர்களுக்கு மட்டும் மேற்படி Exam Pass 31.12.2019 க்குள் Pass செய்ய வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. மற்றவர்களுக்கு இல்லை.

*- நீதி அரிந்தம்*

# சிறு நிறுவனங்கள் பெரு நிறுவனங்களாக வளர கொள்கைகளை மாற்றி அமைத்தல்

மத்திய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் நாடாளுமன்றத்தில் 2018–19ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை சமர்ப்பித்தார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கொள்கைகளை சீரமைப்பது பற்றிக் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கையில், இந்த நிறுவனங்கள் அதன் முதலாளிகளுக்கு நல்ல லாபத்தைத் தருவதுடன் வேலைவாய்ப்புகள் உருவாக்குவதிலும், பொருளாதாரத்தில் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுப்பாடுகளில் இருந்து அவற்றை விடுவிப்பதன் மூலம் அவை வளருவதற்கு ஏற்ற வகையில் நமது கொள்கைகள் அமைய வேண்டும்.

இருந்தபோதிலும், வளர்வதற்கான வாய்ப்புள்ள நிறுவனங்களுக்கு ஏற்றதாக இல்லாமல், ஒருபோதும் வளராமல் இருக்கும் சிறிய நிறுவனங்களுக்கு ஆதரவான கொள்கைகள் காரணமாக வேலைவாய்ப்புகள் உருவாக்கும் நிலையில பாதிப்பு ஏற்படுகிறது. அந்த நிறுவனங்கள் பெரிய வளர்ச்சி காணக் கூடிய வாய்ப்பில் இருந்தாலும், ஊக்கத்திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்காக குறு, சிறு தொழில் பிரிவில் நீடிக்கின்றன.

100 தொழிலாளர்களுக்கும் குறைவானவர்கள் உள்ள சிறிய நிறுவனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றபோதிலும் - உற்பத்தித் துறையில் பாதிக்கும் மேற்பட்டவை இந்தப் பிரிவில் உள்ளன - வேலைவாய்ப்பு வழங்குவதில் அவற்றின் பங்கு வெறும் 14% மட்டுமே உள்ளன. அவற்றின் உற்பத்தி அளவு வெறும் 8% மட்டுமே உள்ளது. இதற்கு மாறாக, பெரிய நிறுவனங்கள் ( 100 தொழிலாளர்களுக்கும் மேற்பட்டோர் பணிபுரியும் நிறுவனங்கள்) இதுபோன்ற வேலைவாய்ப்பில் முக்கால்வாசி இடத்தை எடுத்துக் கொள்கிறது எண்ணிக்கையில் இவை 15% மட்டுமே இருந்தாலும், உற்பத்தியில் சுமார் 90% பங்கைப் பெற்றுள்ளன.

நிறுவனங்களின் வயது மற்றும் வளைந்து கொடுக்காத தொழிலாளர் வரன்முறைகள் என்ற அடிப்படைகள் இல்லாமல் அளவின் அடிப்படையில் ஊக்கத் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. இதனால் நிறுவனங்களின் அளவு வரையறுக்கப்படுகிறது. அதுதான் இந்த நிலையை உருவாக்குகிறது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை இதில் இருந்து விடுவிக்கவும், அவை வளர உதவி செய்யவும், 10 ஆண்டகளுக்கும் குறைவான நிறுவனங்களுக்கு தேவையான பின்னணிகள் இருந்தால், எல்லா அளவிலான நிறுவனங்களுக்கும் ஊக்கத் திட்டங்களை அளிக்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *- PIB*



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952



நண்பன் எதிரியானால் நிம்மதி இருக்காது;
எதிரி நண்பனானால் நம்பிக்கை இருக்காது

# குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வரையறை

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வரையறை விற்றுமுதலை (டர்ன்ஓவர்) அடிப்படையாகக் கொண்டிருக்கும்படி விரைவில் மாற்றப்பட உள்ள நிலையில், அந்த வரையறையானது இயந்திரங்கள், மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டே இருக்க வேண்டும் என்று குறு, சிறு, நடுத்தர தொழில் துறையினர் வலியுறுத்திவருகின்றனர்.

சர்வதேச அளவில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாக உள்ளது. இந்தியாவிலும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சியில் தவிர்க்க முடியாத இடத்தை வகிப்பதுடன், மிகப்பெரிய அளவிலான வேலைவாய்ப்பை உருவாக்குவதாகவும், பல பெரிய நிறுவனங்கள் இயங்குவதற்கான முதுகெலும்பாகவும் உள்ளன.

நாட்டின் பொருளாதாரத்துக்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி, வேலைவாய்ப்பு அளித்தல் போன்ற அனைத்துக்கும் ஆணிவேராக விளங்கும் எம்.எஸ்.எம்.இ. நிறுவனங்கள், கடந்த 2006-ம் ஆண்டின் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் வகைப்பாடு, மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் உற்பத்தி, சேவை நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இயந்திரம், தளவாடங்களின் முதலீட்டின்படி (நிலம், கட்டடங்கள் தவிர்த்து) இந்த வரையறை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி உற்பத்தி சார்ந்த நிறுவனங்களில் ரூ. 25 லட்சத்துக்கும் மேற்படாத முதலீட்டைக் கொண்டிருப்பவை குறு உற்பத்தி நிறுவனங்களாகவும், ரூ. 25 லட்சம் முதல் ரூ. 5 கோடி வரை முதலீட்டைக் கொண்டவை சிறு நிறுவனங்களாகவும், ரூ. 5 கோடி முதல் ரூ. 10 கோடி வரை மூலதனம் கொண்டவை நடுத்தர உற்பத்தி நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அதே போல், சேவை சார்ந்த நிறுவனம் என்றால் ரூ. 10 லட்சம் வரையிலான மூலதனத்தைக் கொண்டவை குறு உற்பத்தி நிறுவனங்களாகவும், ரூ. 10 லட்சம் முதல் ரூ. 2 கோடி வரை மூலதனம் கொண்டவை சிறு நிறுவனங்களாகவும், ரூ. 2 கோடி முதல் ரூ. 5 கோடி வரையிலான முதலீட்டை கொண்டிருப்பவை நடுத்தர சேவை நிறுவனங்களாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மத்திய அரசு குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வரையறையை மாற்றுவதற்கு கடந்த சில ஆண்டுகளாக முயற்சி மேற்கொண்டுள்ளது. முதலீட்டைக் கணக்கில் கொள்ளாமல் அந்த நிறுவனத்தின் விற்றுமுதலை (டர்ன் ஓவர்) அடிப்படையாகக் கொண்டு இந்த வரையறையை கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

## மூலதனத்தை அடிப்படையாக கொண்டிருக்க கோரிக்கை

அந்த வரையறையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முறையே ரூ. 5 கோடி வரை ஆண்டு விற்று முதல் கொண்டிருப்பவை, ரூ. 5 கோடி முதல் ரூ. 75 கோடி வரை கொண்டிருப்பவை, ரூ. 75 கோடி முதல் ரூ. 250 கோடி வரையிலான விற்று முதல் கொண்டிருப்பவை என மாற்றப்பட உள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆதரவாக இருந்தாலும், குறு, சிறு தொழில் நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

விற்றுமுதல் அடிப்படையில் தொழில் நிறுவனங்களுக்கான வரையறை கொண்டு வரப்பட்டால் பெரு நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்களாகும், நடுத்தர நிறுவனங்கள் சிறு நிறுவனங்களாகவிடும். குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு கிடைக்கக் கூடிய அனைத்து மானியங்களையும் சலுகைகளையும் இன்று பெரு நிறுவனங்களாக இருப்பவர்களும் பெறக்கூடும்.

சலுகைகளையும், மானியங்களையும் பெறுவதற்குப் போட்டி அதிகரித்தால் அவை கிடைப்பது குறைந்துவிடும் அல்லது கடினமானதாகவிடும் என்பதே எங்களது அச்சத்துக்கு காரணம் என்று தொழில்முனைவோர்கள் தெரிவிக்கின்றனர்.

விற்றுமுதல் அடிப்படையில் தொழில் நிறுவனங்களை வரையறுப்பது நடைமுறைக்கு ஒத்துவராது என்று பல்வேறு தொழில்முனைவோர்கள் மற்றும் தொழில் அமைப்புகள் கருத்து தெரிவித்து வருகின்றனர். *நன்றி-தினமணி, தொகுப்பு-ஆசிரியர் குழு*




பதிவு எண்: 16 / 2002

☏ 0452-2679676

**மகாத்மா முதியோர் இல்லம்**

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |


வார்த்தைகளை சிதறவிடாதே பிறத நீ வள்ளுவரானாலும்
யாரும் உன்னை கவனிக்க மாட்டார்கள்

# வேளாண்துறையில் வேலைவாய்ப்பு அதிகரிப்பு

கடந்த மே மாதம் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் இந்திய மக்களில் 40.50 கோடி பேர் வேலையில் இருப்பதாக இந்திய பொருளாதார கண்காணிப்பு மையமான சி.எம்.ஐ.இ. தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டில் இதே காலத்தில் 40.25 கோடி பேர்கள் வேலையில் இருந்தனர். இந்நிலையில் இந்த ஓராண்டு காலகட்டத்தில் புதிதாக 25 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. ஆனால், அவை பெரும்பாலும் திறன் குறைந்த வேலை பிரிவுகளின் கீழ் உள்ளன.

இது குறித்து சி.எம்.ஐ.இ.-ன் சிஇஓ மகேஷ் வியாஸ் கூறியபோது, கடந்த இரு வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் எண்ணிக்கை ஆரோக்கியமான ஒன்று. 2018 மற்றும் 2017 காலகட்டத்தில் வேலையில் இருந்தவர்களின் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததை விட குறைவாகும். 2016-ம் ஆண்டில் வேலையில் இருந்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2017-ம் ஆண்டில் 6 லட்சம் அளவிலும், 2018-ம் ஆண்டு அந்த எண்ணிக்கை 55 லட்சம் அளவிலும் குறைந்துள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டு தான் வேலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி இருக்கிறது. என்று அவர் தெரிவித்தார்.

வேளாண்மைத் தொடர்பான துறையில் வேலை வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாக அவர் குறிப்பிட்டார். பிற துறைகளில் வேலைவாய்ப்பு குறைந்துள்ள நிலையில் பலர் விவசாய வேலைகளுக்கு திரும்பி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மே முதல் ஆகஸ்ட் காலத்தில் 85 லட்சம் பேர் வேளாண் துறையில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். உற்பத்தி துறையில் வேலைவாய்ப்பு கணிசமான அளவில் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். அதேபோல் மொத்த வேலைவாய்ப்பு எண்ணிக்கையில் 29.5 கோடி வேலைகள் திறன் குறைந்த வேலைகளாக இருப்பதாக குறிப்பிட்டார். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் அந்த எண்ணிக்கை 70 லட்சம் அளவில் உயர்ந்துள்ளது.



# நன்நெறிக்கதை

இளவரசன் ஒருவன் ஆற்றில் குளிக்கப் போனான். போகும்போது தேவையில்லாமல் தன் பணியாளர்களைத் திட்டிக்கொண்டே போனான்.

அன்று ஆற்றில் வெள்ளம் அதிகமாக இருந்ததால், அது இளவரசனை அடித்துக் கொண்டு போயிற்று. அவனிடம் திட்டு வாங்கிய பணியாளர்களும் இளவரசனைக் காப்பாற்ற பெரிதாய் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அலறியபடி ஆற்றின் போக்கில் போய்கொண்டிருந்த இளவரசனுக்கு பற்றிக்கொண்டு கரையேற ஒரு மரக்கிளை கிடைத்தது. அதைப் பற்றிக் கொண்டான். அக்கிளையும் ஒரு முயலும், எலியும், பூனையும் நனைந்தபடி இருந்தன. இவன் அவற்றைக் கண்டுகொள்ளாமல் இன்னொரு பக்கம் கிளையை இறுகப் பற்றிக் கொண்டான்.

அவ்வழியே வந்த வேடன், அந்தக் கிளையில் கயிற்றை வீசி இழுத்து எல்லோரையும் காப்பாற்றினான். மயங்கிக் கிடந்த இளவரசனை தன் வீட்டுக்குத் தூக்கி வந்து, அவன் எழுந்ததும் உணவு கொடுத்தான். பசியால் உணவை வேக வேகமாக உண்டு முடித்த இளவரசன் பசியாறியதும் ஓ...வென்று அழுதான்.

வேடன் காரணம் கேட்டபோது, "கேவலம் இந்த முயல், பூனை, எலி ஆகியவற்றுடன் என்னையும் சரிக்கு சமமாக அமரவைத்து உணவு பரிமாறிவிட்டாயே. நான் யார் தெரியுமா? இந்நாட்டின் இளவரசன். நானும் இந்த அற்ப உயிர்களும் சமமா?" என்று கோபத்தில் சீறினான்.

அதற்கு வேடன், "இளைஞனே! நீ மரக்கிளையைப் பற்றும்போது இம்மூன்று உயிர்களும் உனக்கு முன்னரே அக்கிளையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது நீ கௌரவம் பார்த்து கிளையைப் பிடிக்காமல் இருந்திருக்கலாமே. நீ பசியுடன் கண் விழித்தபோதும் இந்த மூன்றும் உன்னருகே தான் இருந்தன. அப்போது நீ இதே காரணத்தைச் சொல்லி சாப்பிட மறுத்திருக்கலாமே.

உனக்குப் பிரச்சினை வரும்போது மட்டும் கௌரவத்தை ஒதுக்கி வைக்கிறாய். உன் பிரச்சனை தீர்ந்து நிம்மதியாக இருக்கும்போது கௌரவம் பார்த்து பிறரை ஒதுக்குகிறாய். இது எவ்வளவு மோசமான குணம்.

வாழ்க்கையில் நீ எவ்வளவு திறமைகளை வளர்த்திருந்தாலும், எவ்வளவு பெரிய அதிகாரத்தில் இருந்தாலும், நல்ல நோக்கமும் எண்ணமும் இல்லையென்றால் அவையெல்லாம் வீண்" என்றார். தன் தவறை உணர்ந்த இளவரசன், மன்னிப்பு கேட்டு திருந்தினான்.

நல்ல நோக்கமில்லாத மனிதனுக்கு எவ்வளவு அதிகாரம் கிடைத்தாலும் திறமை இருந்தாலும் அது வீண்தான்!.



# சேவை செய்தும் சம்பாதிக்கலாம்

படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்கள் இ-பொது சேவை மையம் தொடங்குவதன் மூலம் போதிய வருமானம் ஈட்ட வாய்ப்புள்ளது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே இ-பொது சேவை மையம் நடத்தி வரும் எஸ்-இமயவர்மன் கூறியதாவது:

சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் உள்பட 21 வருவாய்த்துறை ஆவணங்களைப் பெற இணையம் மூலம் விண்ணப்பித்து பெற அரசு அறிவித்துள்ளது. இதற்காக பொதுமக்கள் இ-பொது சேவை மையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மையத்தை நடத்துவதன் மூலம் படித்த இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு பெற்று நல்ல வருமானம் பெறலாம்.

ஜி.எஸ்.டி., பதிவு செய்தல், வருமான வரித் தாக்கல் உள்ளிட்ட சேவைகளையும் கணினியைக் கொண்டு இணையம் வழியே செய்து கொடுத்து சேவையுடன் வருமானம் ஈட்டலாம்.

மத்திய அரசின் இ-பொது சேவை மையத்தைத் தொடங்க விரும்புவோர் https://digitalseva.csc.gov.in என்ற இணையதளத்தில் ஆதார், பான் அட்டை, வங்கிக் கணக்கு விபரம் ஆகியவற்றைக் கொண்டு பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த 10 முதல் 15 நாட்களுக்குள் இ-பொது சேவை மையம் தொடங்குவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கிவிடும்.



இதற்கு ஒரு கணினி, இணையதள வசதி, பிரிண்டர், கைவிரல் ரேகை பதிவு செய்யும் பயோ-மெட்ரிக் கருவி ஆகியவையும், சேவை மையம் நடத்த போதிய இடவசதியும் இருந்தால் போதும். நீங்கள் தேர்வு செய்யும் இடம் மத்திய-மாநில அரசு அலுவலகங்கள் இயங்கும் இடமாகவோ, இணைய வழி சேவைகளை அதிகம் நாடும் பொது மக்கள் கூடும் இடமாகவோ இருந்தால் நல்லது.

இணையவழி சேவைகள்: மின் கட்டணம் செலுத்துதல், பயிர்க்காப்பீடு செய்தல், இரு சக்கர வாகனக் காப்பீடு, தனி நபர் காப்பீடு, ஓய்வூதியத் திட்டப் பதிவு, ரயில் பயணச் சீட்டு முன்பதிவு ஆகியவற்றையும் செய்து கொடுக்கலாம். ஜி.எஸ்.டி., வருமானம் வரி தாக்கல் தொடர்பாக இணைய வழி பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. அதில் பயிற்சி பெற்று ஜி.எஸ்.டி உள்ளீட்டவற்றையும் பதிவு செய்து கொடுக்கலாம்.

ஆங்கிலம் பேச்சுப்பயிற்சி, அடிப்படை கணினிப் பயிற்சிகள், DTP., DCA., PGDCA., Tally உள்ளிட்ட கணினிப் பயிற்சிகளுக்கான மத்திய அரசின் ஏடுகள் இ-பொது சேவை மையம் தொடங்குபவர்களுக்கு வழங்கப்படும். இதைக் கொண்டு உள்ளூர் மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்தலாம். இணையவழியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு மத்திய அரசின் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்த இ-பொது சேவை மையத்துடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. எனவே, இ-பொது சேவை மையம் வைத்துள்ளவர்கள் 10 பேரை நியமித்து கணக்கெடுப்புப் பணியில் ஈடுபடலாம்.

மேலும் விபரம் தேவைப்படுவோர் 72009 41541 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

- தினமணி



LAABH
SAMACHAR
MULTI COLOR ADVT.
Contact: 93441 97952



முயலின் வெற்றி அதன் காலடியில்;
மனிதனின் வெற்றி அவன் தன்னம்பிக்கையில்

# தட்கல் Vs பிரீமியம் தட்கல்

அவசர கால ரயில் பயணங்களுக்கு உதவ தட்கல் மற்றும் பிரீமியம் தட்கல் கோட்டாக்களை வழங்குகிறது ஐ.ஆர்.சி.டி.சி. இந்த இரண்டு கோட்டா டிக்கெட்களுக்கும் ஒரே வித்தியாசம் மட்டுமே உள்ளது. விலை மட்டுமே அந்த வித்தியாசம்.

தட்கல் டிக்கெட் விலை, இரண்டாம் வகுப்பு பயண டிக்கெட் விலையில் 10% அதிகமாக இருக்கும். மற்ற வகுப்புகளுக்கு இது 30% ஆக இருக்கும். பிரீமியம் தட்கலுக்கு குறிப்பிட்ட கட்டணம் நிர்ணயிக்கப்படுவதில்லை. விலை மாறிக்கொண்டே இருக்கும். **தட்கல்** Vs **பிரீமியம் தட்கல்** தெரிந்துகொள்ள வேண்டியவை:

- பிரீமியம் தட்கல் டிக்கெட் விலையானது, புக்கிங் எண்ணிக்கையையும், குறைந்து வரும் சீட் எண்ணிக்கையையும் பொருத்து மாறுபடும். எளிதாக சொல்லப்போனால், சீட்டுக்கான தேவை அதிகரிக்க, விலையும் அதிகரிக்கும். சில நேரங்களில் மிக அதிகமாக கூட இருக்கலாம்.
- தட்கல், பிரீமியம் தட்கல் இரண்டுமே பயண தேதிக்கு ஒரு நாள் முன் பதிவு செய்ய வேண்டும். ஏ.சி. வகுப்பில் பயணம் செய்ய காலை 10 மணிக்கும், மற்ற வகுப்புகளுக்கு காலை 11 மணிக்கும் தட்கல் மற்றும் பிரிமீயம் தட்கல் புக்கிங் தொடங்கும்.
- ஆர்.ஏ.சி. அல்லது வெயிட்டிங் லிஸ்ட் டிக்கெட்களை தட்கலில் பதிவு செய்யலாம். ஆனால், பிரிமீயம் தட்கலில் பதிவு செய்ய முடியாது.
- ஏஜெண்ட்கள் மூலம் பிரீமியம் தட்கல் புக் செய்ய முடியாது. ஆனால் ஐ.ஆர்.சி.டி.சி யின் வெப் சர்வீஸ் ஏஜெண்ட்கள் மட்டும், ஒரு நாளுக்கு, ஒரு ரயிலில், ஒரே ஒரு பிரீமியம் டிக்கெட்டை பதிவு செய்ய முடியும்.
- ஆன்லைனில் தட்கல் டிக்கெட் பதிவு செய்ய பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அனைத்தும், பிரீமியம் தட்கலுக்கு பொருந்தும் என்கிறது ஐ.ஆர்.சி.டி.சி.

*- NDTV*

# WhatsApp–ல் குரூப் தொல்லையா?

## புதிய வசதி அறிமுகம்

அனைத்து ஸ்மார்ட் போன்களிலும் தவிர்க்க முடியாத செயலியாக தகவல் பரிமாற்றத்துக்காக உருவாக்கப்பட்ட வாட்ஸ் அப், இடம் பெற்றுள்ளது. அதைத் தக்க வைத்துக்கொள்ள, வாட்ஸ் அப் நிறுவனத்தை நிர்வகிக்கும் ஃபேஸ் புக் நிறுவனம் அவ்வப்போது பல புதிய சேவைகளை அறிமுகம் செய்து வருகிறது.

வாட்ஸ் அப் பயன்பாட்டாளர்கள் குழுக்களை அதிக அளவில் பயன்படுத்துவதால் காலச்சூழலுக்க ஏற்ப பல்வேறு மாற்றங்களை அந்த நிறுவனம் கொண்டு வருகிறது. குழுவின் எண்ணிக்கை அதிகரிப்பால், பயன்பாட்டாளர் பலருக்கு தொல்லையாக அமைந்ததால், பல்வேறு கட்டுப்பாடுகளை வாட்ஸ் அப் நிறுவனம் அறிவித்து வருகிறது.


முன்பு வாட்ஸ் அப் குழுக்களில் ஒருவரைச் சேர்ப்பதற்கு எந்தவித அனுமதியும், கட்டுப்பாடும் இல்லாமல் இருந்தது. அதன்பிறகு கடந்த சில மாதங்களுக்கு முன்பு, யார் யார் உங்களைக் குழுக்களில் சேர்க்கலாம் என்ற கட்டுப்பாடு அறிமுகம் செய்யப்பட்டது.

இதில், யார் வேண்டுமானாலும் உங்களை வாட்ஸ் ஆப் குழுக்களில் சேர்ப்பது – "Everyone", செல்லிடப்பேசியில் பதிவிடப்பட்ட தொலைபேசி எண்களில் உள்ளவர்கள் மட்டும் உங்களைக் குழுக்களில் சேர்ப்பதற்கு – "My Contacts", யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதற்கு – "Nobody" என்ற மூன்று தேர்வுகளை வாட்ஸ் ஆப் நிறுவனம் அறிவித்தது. இந்தச் சேவையால் ஏராளமான வாட்ஸ் ஆப் பயன்பாட்டாளர்கள் பயன் அடைந்து வருகிறார்கள்.

தற்போது "My Contacts Except" என்ற புதிய வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் செல்லிடப்பேசியில் பதிவு செய்யப்பட்ட எண்களில் யார், யார் உங்களை குழுக்களில் சேர்க்கலாம் என தனித்தனியாக அனுமதி அளிக்கலாம். தேவையற்றவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் உங்களை குழுக்களில் சேர்ப்பதில் இருந்து முன்கூட்டியே தவிர்க்கலாம். இந்த புதிய சேவையைப் பெற வேண்டுமென்றால் வாட்ஸ் ஆப்–ஐ Update செய்ய வேண்டும். பின்னர் Settings - Account - Privacy - Groups ஆகியவற்றை கிளிக் செய்து தேர்வு செய்ய வேண்டும்.


இதேபோல், வாட்ஸ் ஆப்–ல் அனுப்பப்பட்ட தொடர் Voice Message–ஐ வாட்ஸ் ஆப் கணினியில் ஒன்றை மட்டும் கிளிக் செய்து அனைத்தையும் கேட்கும் புதிய சேவையையும் வாட்ஸ்ஆப் அறிமுகம் செய்துள்ளது.

*- Dailyhunt*

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்

O.V.K. பாஸ்கரன்



V.K. ஜெயசங்கர்

# "சுதந்திரப் போராட்டத்தில் ஸௌராஷ்ட்ரர்கள்"

### நூலாசிரியர் திரு. V.N. சாமி அவர்களுடன் ஓர் நேர்காணல்

மூத்த பத்திரிக்கையாளர் திரு. **வி.என். சாமி** அவர்களின் சுதந்திர போராட்டத்தில் சௌராஷ்ட்ரர்கள் என்ற புத்தகம் சமூகத்தவரின் தேசப்பற்றை உலகெங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்தது என்றால் மிகை ஆகாது.

300 பக்கங்களில் நம் சமூக மக்களின் போராட்ட வரலாற்றை மிகவும் பாடுபட்டு அற்புதமாக எழுதியவரின் திருக்கரங்கள் வணங்கத்தக்கது. நம் சமூகத்தின் ஒவ்வொரு பிரஜையும் பெருமை அடையச் செய்த நல்ல காரியம் என்றால் மிகையாகாது. இந்த புத்தகத்தில் நம் சமூக மக்கள் எவ்வளவு தூரம் தேச விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை துச்சமென மதித்து உழைத்தனர் என்று அறியமுடிகிறது.

1920-ல் இந்திய தேசிய காங்கிரசை மராட்டிய சிங்கம் பால கங்காதர திலகர் தலைமையில் வீறு கொண்டு எழுந்தது சுதந்திரம். எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் என்று முழங்கினார். திலகரின் வழியில் தீவிரவாத போராட்டங்கள் எந்த ஒரு சமூகமும் நடத்த முன் வராத காலத்தில் சௌராஷ்ட்ர சமூகத்தினர் அன்னிய துணி மற்றும் பொருட்களை பகிஷ்காரம் செய்யும் போராட்டத்தை ஒரு ஜாதிக் கட்டுப்பாடாகவே தீர்மானதித்து போராடியதை மகாகவி பாரதியார் பாராட்டி இருக்கிறார் என்ற தகவல் உண்மையில் மெய்சிலிர்க்க வைக்கிறது.

மேலும், தமிழகத்தில் தம்பதி சமேதரராக கணவன் மனைவியாக சிறை சென்றவர்களில் நம் சௌராஷ்ட்ர சமூகத்தினர்கள் தான் அதிகம் என்பது தேசத்தை தெய்வமாகப் போற்றியவர்கள் நம் சமூகத்தினர் என்கிற என்கிற தகவல் வியப்படையச் செய்கிறது. 1922 முதல் 1942 வரை நம் சமூகத்தவர்கள் நூற்றுக்கும் அதிகமானோர் பெயர், வருடம் மற்றும் எந்தெந்த போராட்டத்தில் சிறை சென்றார்கள் என்கிற தகவல் கிடைக்கப்பெறுகிறது.

ஒத்துழையாமை இயக்கம், கள்ளுக்கடை மறியல், உப்பு சத்தியாக்கிரகம், ராஜ துரோக பேச்சு, சட்டமறுப்பு இயக்கம், அன்னிய துணி பகிஷ்கரிப்பு, திராவக வீச்சு வழக்கு, வெள்ளையனே வெளியேறு. இந்தப் போராட்டக் களத்தில் நம் சமூக தாய்மார்கள் ஏராளமானவர்கள் பங்குபெற்று சிறை சென்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருமதி. எம்.கே.எஸ். பர்வதவர்த்தினி அம்பாள், திருக்கொண்டா லட்சுமி அம்மாள், திருமதி. சோலை பாக்கியலட்சுமி, என்.ஆர். ஜானகி அம்மாள், திருமதி. கே. விசாலாட்சி, திருமதி. பாக்கியலட்சுமி அம்மாள், திருமதி. சின்னக்கொண்டா சொர்ணம்மாள், திருமதி. சீதாலட்சுமி குமாரசாமி, சென்னை.

நம் சௌராஷ்டிரர்கள் வெறும் வந்தேறிகள். பிற மாநிலத்திலிருந்து பிழைக்க வந்தவர்கள் என்று நினைத்த காலக்கட்டத்தில் தாங்கள் குடியேறிய தமிழ் நாட்டினை தாய் மண்ணாகிக்கொண்டு மண்ணின் விடுதலைக்காக பெற்ற தாயைவிட சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றனர் என்கிறார் இந்நூலாசிரியர்.

வீட்டில் சௌராஷ்ட்ர மொழி பேசினாலும் வெளி உலகத்தில் தமிழை மிக நேர்த்தியாக பேசி இரு மொழியாளர்களாக தமிழையும் வளர்த்தார்கள் என்கிறார். இந்த நூலை வெறும் பெயர்களும், வருடம் முதலிய தகவல்கள் அல்லாமல் உயிரோட்டமுள்ள உண்மை சம்பவங்களின் தொகுப்பாக எழுதியுள்ளதாக கூறும் இவருக்கு நம் சமூகம் என்ன கைமாறு செய்யப்போகிறது.

இந்த நூலுக்கு பதம்ஸ்ரீ டாக்டர் டி.எஸ். சந்திரசேகர், தொல்லியல் ஆய்வாளர் திரு. அமர்நாத் ராமகிருஷ்ணன் எழுத்தாளர் நீ.சு. பெருமாள் ஆகியோர் அணிந்துரை வழங்கி சிறப்பித்துள்ளனர்.

மொத்தத்தில் தனி மனித ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் நம் சமூகத்தை மேலும் பெருமை அடையச் செய்திருக்கிறது இந்த நூல் என்றால் மிகையாகாது. ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய பொக்கிஷம் இந்த நூல்.

*நேர்காணல்: J.S. சாயி ஜீவன்*





சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை - 1.
Ph: 2320536
100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901
ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன்: 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன்: 4961990
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

## ஸௌராஷ்ட்ர சேம்பர் நிகழ்ச்சி

# உடல் ஆரோக்கியமும்; தொழில் நலனும்

## How to balance Health Vs Business



அன்றாடம் தொழில்... தொழில்... என்றே ஓடிக்கொண்டிருக்கும் நாம், நமது உடலையும் சற்று கவனித்துக்கொள்ளுதல் அவசியம். நமது உடல் ஆரோக்கியமாக வைத்திருந்தால் தான் தொழிலை சரியாக கவனிக்க முடியும். ஆகவே, தொழிலை கவனித்துக்கொண்டே உடலையும் ஆரோக்கியத்துடன் வைத்துக்கொள்வதற்காக **How to balance Health Vs Business** என்ற தலைப்பில் சிறப்புக்கூட்டம் கடந்த 05.11.2019 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக Dr. B.R.J. **கண்ணன்** M.D.D.M., Cardio, Sr. Consultant & Interventional Cardiologist, Vadamalayan Hospital, Mdu. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் தலைமை தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

இணைச் செயலாளர் திரு. J.S. **சாயி ஜீவன்** அவர்களின் இறைவணக்கத்துடன் கூட்டம் துவங்கியது. துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. **கார்த்தி குமரன்** அவர்கள் சிறப்பு விருந்தினரை மிக அருமையாக அறிமுகம் செய்தார்.

அதனை ஏற்று சிறப்பு விருந்தினர் Dr. B.R.J. **கண்ணன்** அவர்கள் தனது உரையில், "முதலில் நேரத்தை நமக்காக ஒதுக்கிக்கொள்ள வேண்டும். நேரம் இல்லை என்று கூறிக்கொள்வது ஒரு உண்மையான காரணமே இல்லை. Income - Expenditure = Savings என்பது தவறு. Income - Savings = Expenditure என்பது தான் சரி. அதுபோலவே, 24 மணி நேரம் - என்னுடைய நேரம் & குடும்பத்திறகான நேரம் = மற்றவை.

முதலில் நமக்காக சேமித்த வைத்தபிறகே மற்றவைகளைப்பற்றி சிந்திக்க வேண்டும். செலவுகளை நம்மால் சுருக்கிக்கொள்ள இயலும். நாம் வாழும் நோக்கமே சந்தோஷத்திற்காகத்தான். அந்த சந்தோஷத்தை அடைவது நம் கையில் தான் இருக்கிறது. நாம் ஏற்படுத்திக்கொள்வதில் தான் உள்ளது.

நம் உடல், குடும்பம் மற்றும் தொழில் இந்த மூன்றையும் பிரிக்க முடியாதது. இதில் ஆழமாக கருதப்படுவது நமது உடல். நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொண்டால் தான் நம் குடும்பத்தையும், தொழிலையும் சரியாக கவனித்துக்கொள்ள முடியும். முடிந்த வரையில், காலை 6 மணி முதல் 8 மணி வரையில் அலைபேசியின் பயன்பாட்டை குறைத்தக்கொள்வது நலம்.

பொதுவாக எந்த ஒரு தொழிலிலும் மன உலைச்சல் ஏற்படுவது வழக்கம். அதன் காரணமாக மற்றவர்களிடத்தில் வெறுப்பை காட்டுகிறோம். இச்செயல் நம் உடல் ஆரோக்கியத்தை கெடுக்கிறது. ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள வேண்டும். நாம் வாழும் நோக்கம் சந்தோஷமாக இருப்பதற்காகத்தான் என்று நம் மனதில் ஆழப்பதிவு செய்துகொண்டால் நம் மன உலைச்சல் ஒரு பொருட்டாக இருக்காது. இதற்கு ஒரு சூத்திரம் (Formula) கூறலாம். அது, **Accept Reality ; React Positively**. நம்மைச் சுற்றி நடப்பவை நம் கையில் இல்லை. ஆனால், அதனை எதிர்கொள்வது நம் கையில் உள்ளது.

இதனைப் புரிந்து கொண்டு நீங்கள் செயல்பட்டால் தொழிலில் நீங்கள் எந்த பிரச்சனை வந்தாலும், எதிர்கொள்ள முடியும். உங்கள் மனமும் சீராக இருக்கும். பிரச்சனைகளுக்கு ஆராய்ந்து தீர்வு காண்பீர்கள். உடலும் ஆரோக்கியத்துடன் இயங்கும் என்று மிக அருமையாக கூறினார். முடிந்தவரையில், அதிகப்படியான Commitments-கள் இருந்தால் குறைத்துக்கொள்வது நலம் என்றும் கூறினார்.


அதோடு, புகைப் பழக்கத்தை தவிர்த்தல், கொழுப்பு, சர்க்கரை நோயை கட்டுப்படுத்துதல் ஆகியவைகளைப் பற்றியும், உணவு பழக்க வழக்கத்தை எவ்வாறு வைத்துக்கொள்வது போன்ற பல்வேறு தகவல்களை மிக அருமையாக விளக்கிக் கூறி தமது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. சிறப்பு விருந்தினர் திரு. Dr. B.R.J. **கண்ணன்** அவர்களுக்கு சேம்பர் நினைவுப் பரிசு வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




DOMESTIC
HONEYMOON PACKAGES
Shimla Manali
5N/6D
Shimla is the capital of the northern Indian state of Himachal Pradesh, in the Himalayan foothills.
- Manali is a high-altitude Himalayan resort town in India's northern Himachal Pradesh state. It has a reputation as a backpacking center and honey-moon destination.
VH VEDHAVALLI HOLIDAYS
Madurai & Tirunelveli
CONTACT US: +91 99430 31237
+91 91599 18447
R.B. SARAVANAN
@vedhavalliholidays
A2/1, K.K. Nagar Main Road, Near Thulasi Pharmacy, Madurai - 625001


BVK Foundation
Presents
6th ANNUAL
Sourashtrian Achievers
BVK Award 2019
August 04, 2019
Achievers
Outstanding Professional
Dr. M.E.Paramasivam
Best Social Worker
Mr. P.V.Sethuraman Iyengar
Achievers
Best Students 10th & 12th
Best Cultural Heritage Propagator
Best Artist
Mr. K.Eswaran
Best Sport Person
Mr. R.V.Gurulal
Privilege Award - Special Student
Dr. J.R.Jawahsrlal
Best Business Innovator
Mr. E.R.Ashok kumar
Outstanding Sourashtrian Award - Bangalore
Mr. S.Niall
Outstanding Sourashtrian Awards - Delhi
Mr. K.K.Shreedhara
Outstanding Sourashtrian Awards - Mumbai
Mr. Mohan V.N. Muthuswamy
Privilege Awards
Mr. K.V.Pathy
Life Time Achievements Awards
Mrs. M.V.Janaranjani Bai

Feeling Good Is Second Nature

Lissy®

• Bra
• Panty
• Slips

All Women Love

Feeling Second Nature

Manufacturer:

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

# தொழில் முனைவோருக்கான வரப்பிரசாதம்

# SIDBI யின் SPEED கடன் திட்டம்

SMALL INDUSTRIES DEVELOPMENT BANK OF INDIA

- CDISSIA

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்க, பல்வேறு கடன் திட்டங்களை அரசுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், NBFC எனப்படும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

ஆனால், இக்கடன்களை மிகக் குறைந்த காலத்தில், குறைந்த வட்டி விகிதத்தில், எவ்விதமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பிணையமாக வழங்காமல் (கொலேட்டரல் செக்யூரிட்டி) பெறுவதென்பது தொழில்முனைவோர்கள் பொதுவாகவே சந்தித்து வருகின்ற பெரிய சவாலாகும்.

இந்த இடர்பாடுகளை நீக்குவதற்காகவென்றே, இந்திய பாராளுமன்றத்தினால் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக துவக்கப்பட்ட இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) **ஸ்பீட் (SPEED)** என்ற ஒரு புதிய கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் தொழில்முனைவோர்கள் தங்களுக்கு தேவைப்படும் அனைத்து விதமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அவற்றின் அசல் உற்பத்தியாளர்களிடமிருந்தே (OEM - Original Equipment Manufacturers) நேரடியாக வாங்கிக்கொள்ள கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தில்கடன் வழங்குவது ஆகும்.

இக்கடனை வாங்க உத்தேசிக்கும் விண்ணப்பதாரர் ஏற்கனவே SIDBI-யில் கடன் வசதிகளை அனுபவித்து வருபவராக இருந்தால் ரூ. 2 கோடி வரை இயந்திரங்களை வாங்க கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் SIDBI-க்கு புதிய வாடிக்கையாளராக இருந்தால் ரூ. 1 கோடி வரை கடன் தொகை அனுமதிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர் நிறுவனம் குறைந்த பட்சம் மூன்று வருட காலம் இயங்கி வரும் தொழில் நிறுவனமாக இருக்க வேண்டும். கடைசி 2 நிதியாண்டுகளில் நிறுவனம் லாபத்தை ஈட்டி இருக்க வேண்டும். விற்பனையில் தொடர் வளர்ச்சியை பெற்றிருக்க வேண்டும். மேற்கண்ட கால கட்டங்களல் நிகர நட்டம் (Cash Loss) ஏதும் பெற்றிருக்கக் கூடாது.

ஒருவேளை விண்ணப்பதாரர் நிறுவனம் புதிய தொழிற்சாலைகளை (க்ரீன் ஃபீல்ட் திட்டங்கள்) நிறுவுவதற்கு கடன் பெறுவதாக இருந்தால், இணைக்கடன் வாங்குபவருடன் (கோ-அப்ளிகேண்ட்) சேர்ந்து விண்ணப்பிக்க வேண்டும். ஸ்பீட் திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்பும் தொழில்முனைவோர்கள், இதற்கான விண்ணப்பத்தை தக்க ஆவணங்களுடன் SIDBI-யின் கிளைகளில் சமர்ப்பித்த 2 நாட்களுக்குள் கடனுக்கான அனுமதி வழங்கப்பட்டுவிடும்.



அவ்வாறு வாங்கிய கடனை, குறைந்த பட்சம் 2 ஆண்டு முதல் 5 வருடங்களில் திரும்ப அடைத்துக் கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்பும் விண்ணப்பதாரரின் தகுதி மதிப்பீட்டை (இன்டர்னல் ஸ்கோரிங்) பொறுத்து, வாங்கும் கடனின் மீது 9.25% முதல் 10% வரை வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படும். விண்ணப்பதாரர் நிறுவனம் குத்தகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் தொழிற்சாலையாக இருந்தால், அக்கட்டிடத்தின் உரிமையாளரிடமிருந்து ஒரு அனுமதிக் கடிதத்தை பெற்று SIDBI-க்கு வழங்க வேண்டும்.

ஒருவேளை, விண்ணப்பதாரர் நிறுவனம் இயங்கிவரும் கட்டிடம் தனி நபரிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டதாக இருந்தால், SIDBI வங்கியினால் விதிக்கப்படும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடன் அனுமதிக்கப்படும்.

